மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். தனித்தன்மை எஃகு வார்ப்பு தொழிலில் உபயோகப்படும் மிக முக்கியமான தாதுவான மாலிப்டெனைட் என்னும் கனிப்பொருள் மதுரை மாவட்டம் பழனி வட்டத்திலுள்ள காடிக்குட்டம், சத்திரப்பட்டி என்னும் கிராமங்களுக்கு அருகில் இந்திய கனிப்பொருள் நில ஆய்வுத் துறையாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(இ) இந்திய கனிப்பொருள் நில ஆய்வுத்துறையார் இப்பகுதியில் தீவிர ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஏறத்தாழ 17,000 மெட்ரிக் டன் 0.187 சத விகிதம் மாலிப்டெனைட் தாது 140 மீட்டர் நிலப்பரப்பில் 38.35 மீட்டர் ஆழம் வரை இருக்கலா மென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் துளைக்கருவியின் மூலம், துளை போட்டு விரிவான ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது.

Mica deposits in Kanyakumari District.

* 331 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government so far to utilise the mica deposits in Kanyakumari district ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அபிரகம் (மைக்கா) வகைகளுள் ஒன்றான் ஃப்ளொகோபைட், இந்தியப் புவியியல் துறையினராலும், மாநில புவியியல் பிரிவாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கோடு, இரணியல், விளவங்கோடு, திப்பூர் மலை, அப்பியோடு, நட்டாலம், நெய்யூர் ஆகிய இடங்களைச் சுற்றிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அபிரகப் படிவங்கள், மேல்மட்டத்தில் குறைந்த அளவில் மட்டும் கிடைப்பதாக ஆராய்ச்சியின் மூலம் அறியப்பட்டது. மேலும் இவ்வபிரகத்தின் தரக்குறைவு, தொழில் முறையில் இவ்வபிரக வகையில் தேவையின்மை, ஆகிய இவ்விரு காரணங்களினால் மேற்கூறிய அபிரகப் படிவங்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இங்கு முன்னாலிருந்து மைகா டெபாசிட் பல கம்பெனிகளால் எடுக்கப் பட்டிருக்கிறது. அதேபோல மறுமுறையும் புனராலோசனை செய்து யாராவது முன்வந்தால் அதற்கு அரசாங்கம் வேண்டிய ஊக்கங்களை அளிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : brown coloured mica என்று சொல்கிறார்கள். இது அதிகப் பயன் இல்லை என்றும், Muscovite mica அதிகப் பயனுள்ளதாகவும் கருதப்படுகிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப்போல் யாராவது முன் வந்தால் அனுமதி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.